சுருக்கம்

பள்ளிக்கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்களிடமிருந்து இணையதள பதிவுக்கட்டணமாக பெறப்படும் தொகை ரூ.50/- என்பதை ரூ.70/- என உயர்த்தி அதில் ரூ.35/-ஐ சேவை மையங்களுக்கும், ரூ.35/-ஐ அரசு கணக்கு தலைப்பிலும் செலுத்த அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி(அ.தே)த்துறை

அரசாணை (2டி) எண். 42 நாள் 11.04.2023

சுபகிருது வருடம், பங்குனி - 28

திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (1டி) எண்.49, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள் 04.03.2014
2. அரசாணை (1டி) எண்.148, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள் 20.04.2016
3. அரசாணை (1டி) எண்.780, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள் 28.12.2017
4. அரசுக் கடித (நிலை) எண்.86/பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை/2022, நாள் 09.05.2022
5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 023458/எச்-1/2022, நாள் 22.12.2022.

--------------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத் தேர்வில் தனித்தேர்வர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை இணையதளம் வாயிலாக பெறுதல் பொருட்டு, தமிழகம் முழுவதும் கணினி வசதியுள்ள பள்ளிகளில் சிலவற்றை சேவை மையங்களாக அறிவித்து, அச்சேவை மையங்கள் வாயிலாக தனித்தேர்வர்களின் விண்ணப்பங்கள் பெறுவதற்கும், அவ்வாறான சேவையினை மேற்கொள்வதற்கு இணையதளப் பதிவுக் கட்டணமாக ரூ.50/-ஐ வசூலித்துக்கொள்ளவும் அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தனித்தேர்வர்களின் இணையதள பதிவுக்கட்டணமான ரூ.50/-லிருந்து ரூ.20/-ஐ உரிய முதன்மைக் கல்வி அலுவலர்களின் வழியாக அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (மேல்நிலை) மற்றும் இணை இயக்குநர் (பணியாளர்) பதவிப்பெயரிட்ட இணைந்த வங்கிக்கணக்கில் செலுத்தவும், அவ்வாறாக செலுத்தப்பட்ட தொகையிலிருந்து தேர்வுத் துறைக்குத் தேவைப்படும் மென்பொருள் வடிவமைப்பு, முகப்புத்தாட்கள் அச்சடிப்பு மற்றும் இயந்திரங்கள் வாடகைக்கு

அமர்த்திக் கொள்வது தொடர்பான பணிகளுக்கான செலவினங்களை மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசுப் பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்களிடமிருந்து பெறப்படும் இணையதள பதிவுக் கட்டணம் அரசுக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட வேண்டும் என்றும், எந்தவொரு செலவினமாயினும் அத்துறையின் வரவு செலவு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் சேவை மையங்களில் கணினி பராமரிப்பு மற்றும் இணையத்தில் பதிவு செய்யும் உத்தேசப் பணிக்கு ஏற்படும் தொடரும் செலவினத் தொகையை தேவைக்கேற்றவாறு திருத்திய மதிப்பீட்டில் கோரி பெற்றுக் கொள்ளுமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது.

4. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அனைத்து பொதுத் தேர்வுகள் எழுதும் தனித்தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை பொதுத் தேர்வுகளுக்கான இணைய தள சேவை மையங்களில் பதிவு செய்யப்படும்போது மேற்கொள்ளப்படும் கணினி பயன்பாட்டிற்கான மின்சார சேவைக்கட்டணம், கணினி அச்சுப்பொறி இயந்திரங்களின் தேய்மானம், பழுதுகள், உழைப்பூதியம் மற்றும் கணினியில் விண்ணப்பங்களை பதிவு செய்யும் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம் போன்றவற்றிற்கான செலவினத் தொகையினை சேவை மையங்களால் கணக்கிட்டு வழங்குவதற்கு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதால் தனியாக கணக்கீடு செய்து வழங்க இயலாத நிலை உள்ளது எனவும், சேவை மையங்கள், தங்களுக்கு இப்பணியானது சிரமத்தினை ஏற்படுத்துவதாக தெரிவித்து, சேவை மையப்பணியிலிருந்து தங்களை விடுவிக்கக் கோரியும் கடிதங்கள் அரசுத் தேர்வுகள் இயக்கக அலுவலகத்தில் பெறப்பட்டு வருகின்றன எனவும், தற்போது நடைமுறையில் உள்ள தனித் தேர்வர்களிடமிருந்து பெறப்படும் இணையதள பதிவுக் கட்டணமான ரூ. 50/- லிருந்து, ரூ. 25/-ஐ அரசுக் கணக்கிலும், மீதமுள்ள ரூ.25/- ஐ சேவை மையங்கள் தங்களுக்கு ஏற்படும் மின்கட்டணம், கணினி பராமரிப்பு, உழைப்பூதியம் மற்றும் இணையத்தில் பதிவு செய்வதற்கான பணிக்கு ஏற்படும் செலவினங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதிக்கும் பட்சத்தில், சேவை மையங்களில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைக் களையலாம் எனவும், தற்போது தமிழகம் முழுவதும் உள்ள சேவை மையங்களுக்கு ஓர் ஆண்டிற்கு ஆகும் தொடரும் செலவின தொகையினை, உத்தேச செலவினங்களாக ஆண்டுதோறும் திருத்திய மதிப்பீட்டில் கோரிப்பெறுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையில், தனித்தேர்வர்களின் ஒரு விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவேற்றம் செய்திட இணையதள பதிவுக்கட்டணமான ரூ.50/-லிருந்து ரூ.25/-ஐ அரசுக் கணக்கில் செலுத்தியது

போக, மீதமுள்ள ரூபாய் 25/-ஐ சேவை மையங்கள் தங்களுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள அரசு அனுமதியளிக்கும் நிலையில், சேவை மையங்களில் ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்திட அத்தொகை பெரிதும் பயனளிப்பதோடு, இதன் மூலம் பொதுத் தேர்வுக்கான விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவேற்றும் பணி சிறப்பாக சேவை மையங்களால் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து, தனித்தேர்வர்களிடமிருந்து இணையதள பதிவுக் கட்டணமாக பெறப்படும் ரூ.50/-லிருந்து ரூ.25/-ஐ அரசுக் கணக்கில் செலுத்தவும், மீதமுள்ள ரூ.25/-ஐ பொதுத் தேர்வுகள் தொடர்பாக பதிவு செய்யப்படும் சேவை மையங்களில் ஏற்படும் மின்கட்டணம், கணினி பராமரிப்பு, உழைப்பூதியம் மற்றும் இணையத்தில் பதிவு செய்யும் பணிகளுக்கு ஏற்படும் செலவினங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசின் அனுமதியினை கோரியுள்ளார்.

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத் தேர்வெழுதும் தனித்தேர்வர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை இணையதளம் வாயிலாக பெறுதல் பொருட்டு, தமிழகம் முழுவதும் கணினி வசதியுள்ள பள்ளிகளில் சிலவற்றை சேவை மையங்களாக அறிவித்து, அச்சேவை மையங்கள் வாயிலாக தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களை பெறுவதற்கும், அவ்வாறான சேவையினை மேற்கொள்வதற்கான இணையதள மொத்த சேவைக் கட்டணமாக ரூ.50/- என கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் பெறப்பட்டு வந்த நிலையில், தற்போது ரூ.20/-ஐ உயர்த்தி மொத்த சேவைக் கட்டணமாக ரூ.70/- என நிர்ணயம் செய்யலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும், மேற்காணும் தொகையில் ரூ.35/-ஐ சேவை மையங்களுக்கான சேவைக் கட்டணங்கள் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காகவும், மீதமுள்ள ரூ.35/-ஐ அரசுக் கணக்கு தலைப்பில் செலுத்துமாறும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.10037/நிதி(கல்வி-II)த்துறை/2023, நாள் 06.04.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை - 6
ஆணையர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை - 6
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், (தெற்கு), சென்னை - 35.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -9.

மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.

பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச்செயலர், சென்னை -9.

பள்ளிக் கல்வி(வ.செ.)த் துறை, சென்னை - 9.

நிதி (கல்வி- II / வ.செ.பொது - I& II)த்துறை, சென்னை - 9.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

023458 / செ1 / 2022

நாள் : 21.04.2023

அரசாணை (நிலை) எண் : 42, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, நாள் : 11.04.2023-ன் நகல் தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

இணை இயக்குநர் (மேல்நிலை)

பெறுநர்

1) அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

2) அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்

3) அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்